**கவனிக்க.-** *2011.01.07 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.*
**கவனிக்க.-** இவ்வர்த்தமானியின் பகுதி IV (அ) மற்றும் பகுதி IV(ஆ) ஆகியன சிங்களம் மற்றும் ஆங்கில மொழியில் தனியாகப் பிரிசுரிக்கப்பட்டுள்ளன.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1689 - 2011 ජනවාරි මස 14 වැනි සිකුරාදා - 2011.01.14

*1689 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(*அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது*)


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 176 | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | | - |
| பதவிகள் - வெற்றிடம் | - | | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கான விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2011, சனவரி மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2011, சனவரி மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# மாகாண சபை அறிவித்தல்கள்

## சப்பிரகமுவ மாகாண சபையின் 2010 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க கல்வி (திருத்த) நியதிச்சட்டம்

*27.10.2010 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.*

*15.12.2010 ஆந் திகதி அனுமதி கிடைத்தது.*

சப்பிரகமுவ மாகாண சபையின் ஆணைப்படி,

லலித் தொடம்கொட்டுவ,
சபைச் செயலாளர்,
சப்பிரகமுவ மாகாண சபை.

**சப்பிரகமுவ மாகாண 2010 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்கமும் கொண்ட கல்விச் சாசனச் சட்ட (திருத்தம்)**

*சப்பிரகமுவ மாகாண சபையின் 2010 ஆம் ஆண்டின் முதலாம் இலக்கம் கொண்ட கல்விச் சாசனத்தைத் திருத்தம் செய்வதற்கான பிரகடனம்.*

இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையினால் இவ்வாறு சட்டமாக்கப்படுகின்றது:-

*சுருக்கப்பெயரும் செயற்படும் திகதியும்.*

1. இச்சாசனம் 2010 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கம் கொண்ட கல்விச் (திருத்தம்) சாசனமாக இனங்காணப்படுவதோடு அது ஆளுநரின் அங்கீகாரம் பெறும் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்.

*2010 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கம் கொண்ட சாசனத்தில் 21(3) (ஆ) உறுப்புரையைத் திருத்தம் செய்தல்.*

2. (இங்கு இதன் பின்பு பிரதான சாசனம் என்று குறிப்பிடப்படும்) சப்பிரகமுவ மாகாணத்தின் 2010 முதலாம் இலக்கக் கல்விச் சாசனத்தில் 21(3) (ஆ) உப உறுப்புரையில் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை நேரத்தில் மு. ப. 8.00 மணியிலிருந்து பி. ப. 2.00 மணி வரை என்பதற்குப் பதிலாக ஞாயிற்றுக்கிழமைகளில் காலை நேரத்தில் மு. ப. 8.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை என்று மாற்றம் செய்வதன் விளைவாக அவ்வுறுப்புரை திருத்தம் செய்யப்படுகின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழி மூலம் மேலோங்கி நிற்றல்.*

3. இச்சானத்தின் சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலங்களிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படுமிடத்து சிங்கள மொழி மூலமே மேலோங்கி நிற்கும்.

*1-260*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.